மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செங்கோட்டை.

**<u>அசல் வழக்கு எண் 33/2022</u>**

1.கருப்பசாமி

2.மாரியப்பவர்ஷன் ... வாதிகள்

//எதிர்//

1.இருளப்பத் தேவர்,
2.கருப்பசாமி
3.ஜயப்பன்
4.வேல்சாமி ... பிரதிவாதிகள்.

<u>தமிழ்நாடு நீதித்துறை முத்திரைக்கட்டண சட்டம் 14/1955–ன் கீழ் அசையாச் சொத்துக்களின் மதிப்பு விபரப்பட்டியல்</u>

| | | |
|---|---|---|
| 1.நீதிமன்ற கட்டணப்பிரிவும், உட்பிரிவும் | : | சட்டப்பிரிவு 25(d) |
| 2.வழக்கின் தன்மை | : | விளம்புகை பரிகாரம் |
| 3.வழக்கு தாவா மதிப்பு | : | ரூ.5000/– |
| 4. நீதிமன்ற கட்டணம் | : | தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக் கட்டணச் சட்டம் பிரிவு 25(d)–ன் கீழ் 150/–க்கு நீதிமன்ற முத்திரைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. |

//உத்தரவுபடி//
(ஒம்/–என்.சந்திரகலாவதி)
தலைமை எழுத்தர்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செங்கோட்டை.

**முன்னிலை திரு.எம்.சுனில் ராஜா, பி.ஏ., எம்.எல்.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், செங்கோட்டை.

2023–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ம் நாள் வியாழக்கிழமை

CNR No.TNTL14–003622–2021

**அசல் வழக்கு எண்.33/2022**

----

1.தென்காசி மாவட்டம், செங்கோட்டை தாலுகா, பெரியபிள்ளைவலசைக் கிராமம், விஸ்வநாதபுரம், பிள்ளையார் கோவில் தெரு, கதவு எண்.3/177 ல் வசித்து வரும் அழகையாத்தேவர் அவர்கள் குமாரர், இந்து, இரயில்வே ஓய்வு, தற்பொழுது விவசாயம் 60 வயதுள்ள கருப்பசாமி

2.தென்காசி மாவட்டம், செங்கோட்டை தாலுகா, பெரியபிள்ளைவலசை கிராமம், விஸ்வநாதபுரம் மேற்கு பகுதி கதவு எண்.3/221ல் வசித்து வரும் அழகையாத்தேவர் அவர்கள் குமாரர், இந்து, விவசாயம், 46 வயதுள்ள மாரியப்பவர்ஷன் ... வாதிகள்

//எதிர்//

1.தென்காசி மாவட்டம், செங்கோட்டை தாலுகா, பெரியபிள்ளைவலசைக் கிராமம், விஸ்வநாதபுரம், மெயின் ரோடு, கதவு எண்.4/96ல் வசித்து வரும் கருப்பசாமித் தேவர் அவர்கள் குமாரர், இந்து, விவசாயம், 80 வயதுள்ள இருளப்பத் தேவர்,

2.தென்காசி மாவட்டம், செங்கோட்டை தாலுகா, பெரியபிள்ளைவலசைக் கிராமம், விஸ்வநாதபுரம், மெயின் ரோடு, கதவு எண்.4/96ல் வசித்து வரும் இருளப்பத் தேவர் அவர்கள் குமாரர், இந்து, விவசாயம், 52 வயதுள்ள கருப்பசாமி

3.தென்காசி மாவட்டம், செங்கோட்டை தாலுகா, பெரியபிள்ளைவலசைக் கிராமம், விஸ்வநாதபுரம், மெயின் ரோடு, கதவு எண்.4/96ல் வசித்து வரும் இருளப்பத் தேவர் அவர்கள் குமாரர், இந்து, விவசாயம், 50 வயதுள்ள ஐயப்பன்

4.தென்காசி மாவட்டம், செங்கோட்டை தாலுகா, பெரியபிள்ளைவலசைக் கிராமம், விஸ்வநாதபுரம், மெயின் ரோடு, கதவு எண்.4/96ல் வசித்து வரும் இருளப்பத் தேவர் அவர்கள் குமாரர், இந்து, விவசாயம், 37 வயதுள்ள வேல்சாமி ... பிரதிவாதிகள்.

இவ்வழக்கானது வாதிகளுக்கு பாத்தியப்பட்ட பிராது தபசில் சொத்தின் ஒரு பகுதியினை 1ம் பிரதிவாதி 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு 28.07.2016ம் தேதிய ஏற்பாடு ஆவணம் எண்.1305/2016ல் தபசில் 2ம் அயிட்டமாக குறிப்பிட்டு மோசடியாக எழுதிக்கொடுக்கப்பட்டுள்ள மேற்படி ஏற்பாடு ஆவணம் செல்லத்தக்கதல்ல (Null and Void) என வாதிகளுக்கு ஆதரவாக விளம்புகை பரிகாரம் வழங்குமாறும் மற்றும் இவ்வழக்கின் செலவுத்தொகை வாதிகளுக்கு பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்கும் படிக்கும் கேட்டு வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பிராது தாக்கலான நாள் : 29.04.2021, 15.09.2021

| | | |
|---|---|---|
| வழக்கு மூலம் | : | 04.07.1955, 04.10.1969, 20.11.1986, 19.10.2016, 28.07.2016, 20.05.2018, 20.10.2018 மற்றும் 09.03.2019 ஆகிய தேதிகளில் செங்கோட்டை வட்டம், பெரியபிள்ளைவலசை கிராமத்தில் வைத்து உற்பத்தி. |
| வழக்கின் மதிப்பு | : | ரூ.5000/– |
| முத்திரைக்கட்டணம் | : | தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக் கட்டணச் சட்டம் பிரிவு 25(d)–ன் கீழ் 150/–க்கு நீதிமன்ற முத்திரைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. |

இவ்வழக்கானது 16.03.2023 இன்று விசாரணைக்கு வந்த போது, வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எம்.கிளிப்பாண்டி அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எஸ்.சுபசேகர் அவர்கள் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் ஒருதலைபட்சமாக கருதப்பட்டுள்ள நிலையில், இவ்வழக்கானது ஒருதலைபட்ச விசாரணைக்காக வாய்தா ஏற்பட்ட நிலையில், வாதிகள் தரப்பில் எந்தவித எடுத்துரைப்பும் இல்லாத நிலையில், வாதிகளை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு கட்டளையிட்டு வழங்கும்,

**<u>தீர்ப்பாணை</u>**

1. இவ்வழக்கானது வாதிகள் தரப்பில் சாட்சி விசாரணைக்கு போதிய காலஅவகாசம் வழங்கியும் தயராக இல்லாத காரணத்தினால் தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.
2. செலவுத்தொகை குறித்து ஆணையில்லை.

(வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் செலவு விபரப்பட்டியல் தாக்கல் இல்லை.)

**<u>தபசில் சொத்து விபரம்</u>**

1) தென்காசி பதிவு மாவட்டம், தென்காசி சப்ரி ஆக இருந்து தற்பொழுது பண்பொழி சார்பதிவாளர் அலுவலகம், பெரியபிள்ளைவலசைக் கிராமம், அயன் புஞ்சை சர்வே எண்.141/1B. ஏக்கர் 1 செண்டு 16 ல் வடக்கு செண்டு 56 க்கு எல்கை. திருமலை தேவர் புஞ்சைக்கும் வடக்கு, பிரமநாயகம் பிள்ளை புஞ்சைக்கும் கிழக்கு, கிருஷ்ணன் செட்டியார் புஞ்சைக்கும் தெற்கு, தென்வடல் பிலாத்துக்கும் மேற்குமானதும் தபசில் விபரம் சரி.

2) தென்காசி பதிவு மாவட்டம், தென்காசி சப்ரி ஆக இருந்து தற்போது பண்பொழி சார்பதிவாளர் அலுவலகம், பெரியபிள்ளைவலசைக் கிராமம், அயன் புஞ்சை சர்வே எண் 141/1B, ஏக்கர் 1 செண்டு 16 ல் 4 ல் 1 க்கு தென்பாதியில் மேல்பாகம் செண்டு 29 க்கு எல்கை. சுப்பையாத் தேவர் புஞ்சைக்கும் மேற்கு, கிருஷ்ணசாமி கரையாளர் புஞ்சைக்கும் வடக்கு, காசித் தேவர் புஞ்சைக்கும் கிழக்கு, வாதிகளின் தாயார் காளியம்மாள் வகையறா புஞ்சைக்கும் தெற்குமானதும் தபசில் விபரம் சரி.

2023–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16–ம் நாள் என்னுடைய கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

(ஒம்/–எம்.சுனில் ராஜா)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
செங்கோட்டை.